பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 09 வெள்ளிக்கிழமை 24.12.2021 கதிர் 277

### எரிவாயு வெடிப்புச் சம்பவத்தில்

## 3,000 கோழிகள் தீயில் கருகி சாவு

பன்னல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லேகம பகுதியிலுள்ள கோழிப் பண்ணையொன்றில் ஏற்பட்ட தீ பரவலால் சுமார் 3 ஆயிரம் கோழிகள் உயிரிழந்துள்ளன 2

# மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் போராட்டம்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

இந்திய இழுவைப்படகு மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் உட்பட பல்வேறு மீனவ அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்று யாழ். மாவட்ட செயலகம் முற்றுகையிடப்பட்டு மாபெரும் கவனவீர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை 9.30 மணியளவில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன முன்றலில் இருந்து கடற்றொழிலாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பேரணி யாழ். மாவட்ட செயலக முன்றலில் 2

### தமிழ்ப் பேசும் தரப்புகளின் ஒருமித்த நிலைப்பாட்டில் சிக்கல்

# 13ஐ ஒட்டி நெருக்கடி

# விலக மனோ பின்னடிப்பு! ஏற்பதற்கு தமிழரசு மறுப்பு!





யாழ்ப்பாணம்,டிசெம்பர்24

தமிழ் பேசும் தரப்புகளின் தலைவர்கள் ஒன்றுபட்டு தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தும் ஆவணம் ஒன்றை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்ப வேண்டும் என்ற முனைப்பில் ஆரம்பிக்கப்பட்டு, கணிசமான அளவு முன்னேற்றம் கண்ட முயற்சி பெரும் பின்னடைவை இப்போது எதிர்கொண்டுள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தக் கோருவது என்ற ஆரம்ப நிலைப்பாட்டில் இருந்து விலகி வருவதற்கு இணங்கிய தமிழர் முற்போக்கு முன்னிணியின் தலைவர் மனோ கணேசன், மீண்டும் 13 ஐக் கட்டிப் பிடிக்க முயல்கின்றமையை அடுத்தே இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. 8

## பி.சி.ஆர்.மோசடி கும்பல் சிக்கியது

வெளிநாடு செல்பவர்களுக்கு மோசடியான முறையில்கொரோனாபரிசோதனை அறிக்கையைத் (பி.சி.ஆர்.) தயாரித்து அதிக விலைக்கு விற்பனை செய்து வந்த கும்பல் சிக்கியுள்ளது.

கொச்சிக்கடையில்பொலிஸ் விசேடஅதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே மேற்படி கும்பலைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 21 மற்றும் 37 வயதுகளையுடைய கொச்சிக்கடை மற்றும்ரத்தொலுகமபிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக இரத் 2

### 'ஒரு ஆளுக்கு ஒரு சட்டம்' செயலணியிலுள்ள

## தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் உடனடியாக விலக வேண்டும்!

### மனோ எம்.பி. வலியுறுத்து



ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணியின் பெயரை 'ஒரு ஆளுக்கு ஒரு சட்டம்' என நான் பிரேரிக்கின்றேன். இந்தச் செயலணியில் இருக்கும் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் உடன் பதவி விலக வேண்டும் எனவும் கோருகின்றேன்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் 8

### காரைநகர் கடற்பகுதியில் நேற்றிரவு

## 365 கிலோ கஞ்சாவுடன் இருவர் மடக்கிப்பிடிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் கடற்பகுதியில் வைத்து 365 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றிரவு 11.30 மணயளவில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

குறித்த இருவரும் காரைநகர் கடற்பகுதியால் கஞ்சாவைக் கடத்தி வந்தவேளை கடமையில் இருந்த கடற்படையினர் அவர்களை மடக்கிப் பிடித்தனர். 2



## 'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' இன்று தொடக்கம் வெளியீடு




ராஜ் சிவராஜ்ஜின் இயக்கத்தில் மதீசனின் இசையில் உருவாக்கப்பட்டுள்ள 'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' என்கின்ற ஈழத்துத் திரைப்படம் இன்று வெளியாகின்றது.

பல்வேறு குறுந்திரைப் படங்கள், பாடல் காணொலிகள், சமூக விழிப்புணர்வு மற்றும் நகைச்சுவைக் காணொலிகளை இயக்கி விருதுகளை வென்ற சிவராஜ்ஜின் 2

## 3,000 கோழிகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்று பன்னல பொலிஸார் தெரிவித்தனர்.

எரிவாயு வெடிப்புச் சம்பவத்தில் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

நீர்கொழும்பு பகுதியில் உள்ள வியாபாரி ஒருவர் கோழி பண்ணையே இவ்வாறு தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

சுமார் 17 ஏக்கரில் அவர் கோழி பண்ணை நடத்தி வருகின்றார். சுமார் 35 ஆயிரம் கோழிகள் உள்ளன.

ஒரு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தால் 3ஆயிரம்கோழிகள்உயிரிழந்துள்ளன.

## 365 கிலோ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதன்போது அவர்களிடமிருந்து 365 கிலோ எடையுடைய கஞ்சா மற்றும் ஒரு படகு என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இருவரும் காரை நகரைச் சேர்ந்தவர்கள் என்று கடற்படையினரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் அவர்கள் ஊர்காவற்துறை பொலிஸாரிடம் அவர்கள் பாரப்படுத்தப்பட்டனர்.

## 'புத்திகெட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இயக்கத்தில் வெளியாகின்ற முதலாவது முழுநீளத் திரைப்படமாக இது அமைந்துள்ளது.

கலைத்துறையில் சாதிக்க நினைக்கின்ற பல கலைஞர்களை உள்ளீர்த்து முற்றுமுழுதாக நம்மவர் நிலையை வெளியுலகுக்குக் கொண்டுவரும் நிலையில் உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திரைப்படத்துக்கு மக்கள் ஆதரவை வழங்க வேண்டும் எனத் திரைப்படக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

யாழின் முன்னணி திரைக்கூடங்களில் இன்றும், நாளையும், நாளைமறுதினமும் இந்தத் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

தென்னிந்திய திரைப்படங்களால் நசிவுற்றிருக்கும் ஈழத்து தமிழ்த் திரைத்துறையிலிருந்து இளைஞர்களின் கடும் உழைப்பால் வெளியாகின்றது இந்தப் 'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' திரைப்படம்.

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரின்

# பணிப்புறக்கணிப்புப் போர் தற்காலிகமாக இடைநிறுத்தம்

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பை தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



# வவுனியாவில் தீப்பற்றிய குப்பையேற்றும் வாகனம்

## பொலிஸார் தீவிர விசாரணை

(வவுனியா நிருபர்)

வவுனியா நகர சபை வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த குப்பையேற்றும் வாகனம் இன்று அதிகாலை திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா நகரின் கழிவுகளை நேற்றிரவு ஏற்றிய பின்னர் நகர சபை வளாகத்தில் குப்பையேற்றும் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இன்று அதிகாலை 2 மணி வரை ஊழியர்கள் நகர சபை வளாகத்தில் கடமையாற்றியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நகர சபை ஊழியர் ஒருவர் காலை கடமைக்குத் திரும்பிய வேளையில் குப்பையேற்றும்வாகனம்எரிந்துகொண்டிருந்தது. அதன் பின்னர் நகர சபை தீயணைப்பு வாகனத்தின் உதவியுடன் தீகட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்பட்டது. தீ விபத்தில் வாகனம் பகுதியளவில் மாத்திரமே சேதமடைந்துள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பில்வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சி.சி.ரி.வி. உதவியுடன் தீ விபத்துக்கான காரணம் தொடர்பில் வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் களைகட்டும் சவுக்கு மரத்தடிகள்!

(இ.கலையமுதன்)

கிறிஸ்துமஸ் பெருவிழா உலகம் முழுவதும் நாளை கொண்டாடப்பட இருக்கின்ற நிலையில், சவுக்கு மரத்தடிகளின் விற்பனை யாழ்ப்பாணத்தில் இன்று களைகட்டுகின்றது.

யாழ்ப்பாணம் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் சவுக்கு மரத்தடிகளின் விற்பனை நடைபெறுவதுடன் அதனை ஆர்வத்துடன் பொதுமக்கள் வாங்கிச் செல்கின்றனர்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தில் தங்களது வீடுகளில் பாலன் குடில் அமைத்து சவுக்கு மரங்களால் அலங்கரிப்பது வழமையாகும்.



## பி.சி.ஆர். .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொலுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 17 போலி பி.சி.ஆர். அறிக்கைகள், ஒரு கணினி, 5 கைத்தொலைபேசிகள் என்பனவும் மீட்கப்பட்டன.

## மாவட்ட செயலகத்தை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிறைவடைந்தது.

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கைது செய், கைது செய்த படகுகளை விடக்கூடாது, எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்தப் போராட்டம் காரணமாக ஏ - 9 வீதி மற்றும் யாழ். மாவட்ட செயலகம் சில மணிநேரம் முடங்கியிருந்ததுடன் வீதியூடான போக்குவரத்தும் முடங்கியது.

இதையடுத்து போராட்ட இடத்துக்கு வருகை தந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தான் இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசித் தீர்வைப் பெற்றுத் தருகிறேன் என வாக்குறுதியளித்ததை அடுத்து தாங்கள் போராட்டத்தை கைவிடுகிறோம் எனக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## படிக்காத மேதைகள்

**தமிழீழ விடுதலைப் புலிகளை படிப்பறிவற்றவர்கள், கல்வியறிவற்றவர்கள் என்று முன்னாள் இராணுவத் தளபதியும் இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறிய கருத்து பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.**

**யுத்தத்தின் போது தமிழ் மக்களைக் கொன்றொழித்த இராணுவத் தளபதியான அவருக்கு யுத்தம் முடிந்து ஆறுமாதங்களில் நடத்தப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களும் சேர்ந்து அள்ளி வாக்குப் போட்டனர். அப்படி முட்டாள்தனமாக தமக்கு வாக்களித்த தமிழர்களுக்காகப் போராடியவர்களே விடுதலைப் புலிகள் என்று கருதித்தான் இப்படி அவர் கருத்து வெளியிட்டாரோ என்னவோ...?**

**அந்தத் தேர்தலில் இரண்டு விடயங்களைக் கருத்தில் எடுத்துத்தான் தமிழர்கள் அப்படிச் செயற்பட்டார்கள். அதை அவருக்கு நினைவூட்டுவது பொருத்தமானது.**

**ஒன்று – அத்தேர்தலில் இரண்டு வேட்பாளர்கள். ஒருவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. மற்றையவர் முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா. இருவருமே தமிழ்த் தேசத்தை அழித்த குற்றவாளிகள்தான். தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒருவர் தங்களைச் சுட்டவர். மற்றையவர் சுடச் சொன்னவர். அன்றைய தேர்தலில் தமிழ் மக்கள் முன் இருந்த கேள்வி ஒன்றுதான். சுட்டவருக்குப் போடுவதா? சுடச் சொன்னவருக்குப் போடுவதா? – என்பதுதான். சுடச் சொன்னவரை வீழ்த்தும் முயற்சியாக சுட்டவருக்குத் தமிழ் மக்கள் வாக்குப் போட்டார்கள்.**

**இரண்டாவது – மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான சரத் பொன்சேகாவின் கிளர்ச்சி என்பது தமிழர் தேசத்தை அடக்கி ஒடுக்கி அழிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்த பௌத்த சிங்களப் பெரும் தேசிய வாதம் என்ற பருத்த சுவரில் ஏற்பட்ட சிறு வெடிப்பு. அதைப் பாரிய பிளவாக்கி பேரினவாதச் சுவரைப் பலவீனப்படுத்தும் எத்தனமாகவே அன்று அப்படி ஒரு தீர்மானத்தைத் தமிழர்கள் எடுத்தார்கள்.**

**அடுத்த விடயம் – ஒன்றை சரத் பொன்சேகா மறந்து விடக்கூடாது. பிரிட்டன், அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளிலும் இந்தியாவிலும் உள்ள உயர் பாதுகாப்பு கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பாதுகாப்புத்துறையில் விசேட பயிற்சிகளும் கலாநிதிப் பட்டங்கள் வரையில் மேற்படிப்பும் பெற்ற லெப்டினன்ட் ஜெனரல், மேஜர் ஜெனரல்கள், பிரிகேடியர்கள், கேணல்கள், லெப்டினன்ட் கேணல்கள் என்று குறைந்தது ஐந்நூறுக்கும் குறையாத உயரதிகாரிகளை வைத்திருந்த இலங்கை இராணுவப் படைக்கு எதிராகத்தான் 2006 வரையில் பெரு வெற்றிக் கொடிகளை 'படிக்காத' பிரபாகரனின் படைகள் நாட்டிக் கொண்டிருந்தன. இந்தப் பட்டம் பெற்ற ஐந்நூறு அதிமேதாவிகள் போட்ட இராணுவத் திட்டங்களை எல்லாம் சாரம் அணிந்த பிரபாகரனின் வீரர்கள்தான் தகர்த்தெறிந்தார்கள். கடைசியில் உலகநாடுகளின் வியூகங்களும், 'ராடர்' உட்பட நவீன போர்க்கருவி வசதிகளும் உதவிகளும் கிடைத்ததால் மட்டுமே 'கற்றறிந்த' சரத் பொன்சேகாவின் படையினால் வெற்றி பெற முடிந்தது. அதுவும் அநீதியான போர்த் தந்திரங்களைப் பயன்படுத்தித் தமிழ் மக்களை ஏராளமாகக் கொன்றொழித்துத்தான் ஒப்பேறியது என்பதை சரத் பொன்சேகா மறவாதிருப்பாராக.**

**உயிரிழந்து புதைக்கப்பட்ட வீரர்களை கல்லறைகளை புல்டோஸர் போட்டு சின்னாபின்னமாக்கி, அவர்களை மீளாத்துயில் கொள்ளவும் விடாத – உலக மனித நாகரிகத்தையே கொச்சைப்படுத்துகின்ற படுபாதகச் செயலை 'பௌத்த தர்மம்' ஆகக் கற்றறிந்த மேதைகள்தான் சரத் பொன்சேகா கூறிய படிப்பாளிகள்.**

**இத்தகைய கொரூரப் போக்குச் செயற்பாட்டை இன்னும் நியாயப்படுத்தி நிற்கும் சரத் பொன்சேகா போன்ற அதி மேதாவிகளின் அளவீட்டில் 'படித்தவர்கள்' என்பதற்கு பௌத்த தர்மத்தை – புத்தரின் உயரிய போதனைகளை நாசக் கொரூர்களாக அர்த்தப்படுத்துவதுதான் அடிப்படை. பிரபாகரன் போன்ற உயரிய தலைவர்கள் அத்தகைய படிப்பு படிக்காதவர்கள்தான். அது உண்மையே.**

# குற்றவாளிகளை சிறையில் அடைப்பதால் குற்றச் செயல்களைத் தடுக்க முடியாது!

## நீதி அமைச்சர் அலி சப்றி கருத்து



குற்றவாளிகளை சிறையில் அடைப்பதன் மூலம் குற்றச்செயல்களை தடுக்க முடியாது என நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

குற்றவாளிகளை வகைப்படுத்த வேண்டும், தடுப்புக் காவலில் வைப்பதனாலோ அல்லது சிறையில் அடைப்பதாலோ குற்றச் செயல்களைத் தடுக்க முடியாது.

குறிப்பாக போதைப்பொருள் தொடர்பான குற்றச் செயல்களின் போது, போதைப் பொருள் கொண்டு வரும் சர்வதேச வர்த்தகர்கள், அவற்றை இலங்கையில் விநியோகம் செய்வோர், சமூகத்துக்குள் விநியோகம் செய்வோர், போதைப் பொருள் பயன்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் என பல்வேறு தரப்பினரையும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

போதைப் பொருள் வர்த்தகர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும். போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும்.

போதைப்பொருள் தொடர்பில் அரச இரசாயன பகுப்பாய்வு நிறுவனத்தின் அறிக்கை கிடைக்கப்பெற எட்டு மாதங்கள் தேவைப்பட்டன. தற்பொழுது அது ஒரு மாதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை கிடைக்கப் பெறுவதன் மூலம் துரித கதியில் சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.





# வன்னித் தேர்தல் தொகுதியில் புதிய ஆண்டு பல அபிவிருத்திகள்

## சுரேன் ராகவன் எம்.பி. உத்தரவாதம்

புதிய ஆண்டில் வன்னித் தேர்தல் தொகுதியில் பல புதிய அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் அதற்கு வட்டாரத்தில் உள்ள தேவைப்பாடுகள் தொடர்பிலும் தெரியப்படுத்துமாறும் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை சுதந்திரக் கட்சியின் வன்னித் தேர்தல் மாவட்ட தலைவருமான கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

வன்னித் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த இலங்கை சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு ஒன்று வவுனியா நகரசபையின் உப தலைவர் சு.குமாரசாமி தலைமையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று (வியாழக்கிழமை) மாலை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வன்னித் தேர்தல் தொகுதியில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தற்போதைய நிலைகள் மற்றும் சபை வரவு – செலவுத் திட்டங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளேன்.

வன்னிமாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படும்.

குறிப்பாக அரசாங்கத்துடனும், துறை சார் அமைச்சர்களுடனும் கலந்துரையாடி வரவு –செலவுத் திட்டம் ஊடாக புதிய ஆண்டில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் பல அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாகிய உங்களது வட்டாரத்தில் உள்ள அபிவிருத்தி தேவைப்பாடுகள் தொடர்பாக முன்வைக்கும் இடத்தில் அதனை முன்னுரிமை அடிப்படையில் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் மக்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் புதிய தொழில் முயற்சிகளையும் வன்னியில் உருவாக்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளேன்.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆட்சியை கைப்பற்றியமை பாராட்டுக்குரியது. அடுத்து வவுனியா வடக்கு பிரதேச சபையின் பாதீடு தயாரிப்பிலும் கவனம் செலுத்தி, அந்த சபையைத் திறம்படக் கொண்டு நடத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

# தென்கொரிய முன்னாள் ஜனாதிபதிக்கு தண்டனையிலிருந்து பொதுமன்னிப்பு



ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு 22 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வந்த தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி பார்க் கியூன் ஹேவுக்கு பொது மன்னிப்பு வழங்கி தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜேஇன் விடுவித்துள்ளார்.

நாள்பட்ட தோள்பட்டை மற்றும் முதுகு வலி காரணமாக பார்க் கியூன் ஹே இந்த ஆண்டு மூன்று முறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் அவரது உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவருக்கு பொது மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பார்க் கியூன் ஹேவுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு முன்னர் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை ஜனாதிபதி மூன் ஜேஇன் நிராகரித்து வந்த நிலையில் நேற்று வெளியான இந்த அறிவிப்பு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சி அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி தனது நெருங்கிய தோழியுடன் சேர்ந்து ஊழல் செய்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு பார்க் கியூன் ஹேவுக்கு கடந்த 2008ஆம் ஆண்டு 30வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் இந்தத் தண்டனை குறைக்கப்பட்டது.

தென்கொரியா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பார்க் சுங்-ஹீ கடந்த 1963 முதல் 1979 வரை அந்நாட்டின் சர்வாதிகாரி போல் ஆட்சி செய்து வந்தார். கடந்த 1978 ஆம் ஆண்டில் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது மறைவுக்கு சில ஆண்டுகளுக்கு பின்னர் அரசியலில் குதித்த பார்க் சுங் ஹீயின் மகள் பார்க் கியூன் ஹே கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று தென்கொரியாவின் ஜனாதிபதியாக பதவியேற்றார். ஊழலற்ற ஆட்சியை வழங்குவேன் என்ற வாக்குறுதியுடன் ஆட்சியை கைப்பற்றிய பார்க் கியூன் ஹே குறுகிய காலத்தில் பல்வேறு ஊழல் புகார்களில் சிக்கினார்.

பார்க் கியூன் ஹேவின் நெருங்கிய தோழியான சோய் சூன் அரச விவகாரங்களில் தலையீடு செய்து வருகிறார் எனவும் அரசின் மிக முக்கிய இரகசிய கோப்புகளை ஆய்வு செய்தார் எனவும் குற்றச்சாட்டுகள் கிளம்பின.

மேலும், ஜனாதிபதியுடன் தனக்கு இருக்கும் நெருக்கத்தை பயன்படுத்தி, சாம்சுங் உள்ளிட்ட பல நிறுவனங்களிடம் இருந்தும் நன்கொடைகளை பெற்று, இவர் ஆதாயம் அடைந்தார் எனவும் அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் குற்றம் சுமத்தின.

இதையடுத்து சோய் சூன் சில் கைது செய்யப்பட்டார். அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது.

இதனையடுத்து ஜனாதிபதி பார்க் கியூன் ஹே உடனடியாக பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையுடன் சுமார் 13 லட்சம் மக்கள் பங்கேற்ற பேரணியும் ஆர்ப்பாட்டமும் சியோல் நகரில் நடைபெற்றது. இதையடுத்து, நாடாளுமன்றத்தில் பார்க் கியூன் ஹேவுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

நாடாளுமன்றத்தின் தீர்மானத்தை எதிர்த்து பார்க் கியூன் ஹே அந்நாட்டின் அரசியலமைப்பு சட்ட உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். இந்த முறையீட்டின் மீது விசாரணை நடத்திய நீதிபதி, பார்க் கியூன் ஹேவை நாடாளுமன்றம் பதவி நீக்கம் செய்தது. அவர் உடனடியாக பதவியில் இருந்து நீக்கப்படுகிறார் என உத்தரவு பிறப்பித்தார்.

இந்நிலையில், ஆட்சி அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, தனது நெருங்கிய தோழியுடன் சேர்ந்து ஊழல் செய்ததன் மூலம் 23 பில்லியன் வோன் (21.7 மில்லியன் அமெரிக்க டொலர்) சொத்து சேர்த்தனர் என விசாரணை மூலம் நிரூபணமானது.

இதையடுத்து, இவ்வழக்கில் பார்க் கியூன் ஹேவுக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் ஒரு கோடியே 80 லட்சம் வோன் அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பின்னர் இந்தத் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வாய்வழி கொவிட் தடுப்பு மருந்துக்கு அமெரிக்கா அங்கீகாரம்!

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு பைஸர் நிறுவனம் தயாரித்த பாக்ஸ்லோவிட் (Paxlovid) வாய்வழி தடுப்பு மருந்தை பயன்படுத்தி சிகிச்சை அளிக்க அமெரிக்கா உணவு மற்றும் மருந்து கட்டுப்பாடு நிறுவனம் அனுமதி அளித்துள்ளது.

பைஸர் நிறுவனம் தயாரித்த பாக்ஸ்லோவிட் மருந்து வில்லைகளை கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படும் 12 வயதுக்கு மேற்பட்டோர் எடுத்துக் கொண்டால் நோயின் தீவிரத்தன்மை குறையும் என ஆய்வில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

மேலும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி கடும் பாதிப்புக்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோரை இறப்பில் இருந்து பாதுகாக்க பைஸரின் பாக்ஸ்லோவிட் வாய்வழி தடுப்பு மருந்து 90% பயனுள்ளதாக இருப்பதாகவும் ஒமிக்ரோன் தொற்றுக்கு எதிராகவும் இந்த மருந்து சிறப்பாக செயற்படுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பைஸரின் இந்த வாய்வழி தடுப்பு மருந்தின் அவசர கால பயன்பாட்டுக்கு அமெரிக்கா உணவு மற்றும் மருந்து கட்டுப் பாட்டு நிறுவனம் அனுமதி அளித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு சுமார் 12கோடி மருந்துகளை தயாரிக்க முடியும் என பைஸர் தெரிவித்துள்ளது. அத்துடன், அமெரிக்காவில் இந்த தடுப்பு மருந்தை உடனடியாக விநியோகிக்கத் தயாராக இருப்பதாகவும் அந்நிறுவனம் கூறியுள்ளது.

அமெரிக்க அரசாங்கத்திடம் ஜனவரி மாதத்திற்குள் 265,000 கொரோனா தடுப்பு மருந்து வில்லைகளைக் கையளிக்க முடியும். அடுத்த மாதங்களில் விநியோகம் மேலும் அதிகரிக்கப்படும் என பைஸர் உறுதியளித்துள்ளதாக வெள்ளை மாளிகையின் கொவிட்-19 பதில் ஒருங்கிணைப்பாளர் ஜெப் ஜியண்ட்ஸ் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்க அரசு முன்பதிவு செய்துள்ள 1கோடி தடுப்பு மருந்து வில்லைகளை அடுத்த ஆறு மாதங்களுக்குள் பெற எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# அமெரிக்க நாட்டின் எம்.பியிடம் துப்பாக்கி முனையில் கார் பறிப்பு

அமெரிக்காவின் பிலடெல்பியா மாநிலத்தை சேர்ந்த பெண் எம்.பி.ஒருவரிடம் இருந்து துப்பாக்கி முனையில் அவரது கார், அடையாள அட்டை, அரசாங்க போன் ஆகியவற்றை பறித்துச் சென்றிருக்கிறார்கள் கொள்ளையர்கள். ஆளும் ஜனநாயக கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மேரி கே ஸ்கேன்லென் என்பவரிடம் பட்டப்பகலில் இந்தக் கொள்ளை நடந்திருக்கிறது. இந்த சம்பவத்தில் மேரிக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என அவரது அலுவலகம் கூறியுள்ளது. உள்ளூர் நேரப்படி புதன்கிழமை பகல் 2.45க்கு நடந்த இந்த சம்பவம் அதிர்ச்சியளிப்பதாக மாநகர மேயர் ஜிம் கென்னி கூறியுள்ளார்.

கொள்ளையர்களைத் தேடும் பணியில் கூட்டரசு புலனாய்வு அமைப்பான எவ்ப்.பி.ஐ. உதவி வருகிறது. பல அமெரிக்க மாநகரங்களைப் போலவே பிலடெல்பியாவில் கடந்த ஓராண்டாக வன் குற்றங்கள் அதிகரித்துள்ளன.தெற்கு பிலடெல் பியாவில் உள்ள எவ்ப்.டி.ஆர். பூங்காவில் தனது 2017 அக் யூரா எம்.டி.எக்ஸ். காரை நோக்கி தனியாக நடந்து சென்று கொண்டிருந்தார் மேரி. அப்போது பின்னால் இருந்து வந்த எஸ்.யு.வி. வகை கார் ஒன்றில் இருந்த இரண்டு ஆண் கொள்ளையர்கள் துப் பாக்கி முனையில் அவரை மிரட்டி அவரது கார் சாவியைப் பறித்து காரை எடுத்துக்கொண்டு கிளம்பினர் என்கிறது அவரது அலுவலகம். பிலடெல்பியாவில் கார் பறிப்புச் சம்பவங்கள் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன. 2019இல் 225 கார் பறிப்பும், 2020இல் 409 கார் பறிப்பும் நடந்த நிலையில், இந்த ஆண்டு இதுவரை 720 கார் பறிப்பு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என கூறப்படுகிறது

# அயர்லாந்தில் இரவு விடுதிகள் டிசெம்பர் 26 முதல் மூடல்!

வடக்கு அயர்லாந்தில் இரவு விடுதிகள் 6மணி முதல் மூடப்பட வேண்டும் மற்றும் உட்புறத்தில் நிற்கும் நிகழ்வுகள் தடைசெய்யப்படும்.

அப்போதிருந்து, விருந்தோம்பல் இடங்களில் நடனமாடுவதும் தடைசெய்யப்படும், ஆனால் இது திருமண நிகழ்வுகளுக்குப் பொருந்தாது.

டிசெம்பர் 27ஆம் திகதி முதல், விருந்தோம்பல் அரங்குகள் டேபிள் சேவைக்கு மட்டுமே திரும்பும். ஆறு பேருக்கு மேல் ஒரு மேசையில் ஒன்றாக அமர அனுமதிக்கப்படக்கூடாது.

தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து வடக்கு அயர்லாந்தில் தற்போது அதிக எண்ணிக்கையிலான கொவிட் தொற்றுகள் பதிவாகி வருகின்றன.

வடக்கு அயர்லாந்தில் இப்போது ஒமிக்ரோன் கொவிட் தொற்று, கிட்டத்தட்ட 60 சதவீத தொற்றுகளை உருவாக்குகிறது. விளையாட்டு நிகழ்வுகள் திறன் வரம்பு இல்லாமல் தொடரலாம் ஆனால் இது டிசெம்பர் 30ஆம் திகதி மதிப்பாய்வு செய்யப்படும்.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# மதம் மாற்றுதல் தடைச் சட்டத்துக்கு கர்நாடக சட்டப்பேரவையில் ஒப்புதல்

மதமாற்றத்திற்கு தடை விதிக்க வகை செய்யும் சட்டத்திருத்தத்திற்கு கர்நாடக சட்டப்பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கர்நாடக சட்டப்பேரவையில் பிரேணை குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறிய நிலையில், அடுத்து சட்டமேலவையின் ஒப்புதலுக்கு பிரேணை அனுப்பப்பட உள்ளது. இதன் பின் ஆளுநரின் ஒப்புதலுடன் பிரேணை சட்டமாக மாறும். இதன்மூலம் இந்தியாவில் மதமாற்றத்திற்கு தடை விதிக்க சட்டம் இயற்றிய 9ஆவது மாநிலமாகிறது கர்நாடகா.

கர்நாடக சட்டப்பேரவையில் பிரேணை குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறிய நிலையில், அடுத்து சட்டமேலவையின் ஒப்புதலுக்கு பிரேணைஅனுப்பப்பட உள்ளது. இதன் பின் ஆளுநரின் ஒப்புதலுடன் பிரேணை சட்டமாக மாறும். இதன்மூலம் இந்தியாவில் மதமாற்றத்திற்கு தடை விதிக்க சட்டம் இயற்றிய 9ஆவது மாநிலமாகிறது கர்நாடகா.

இந்தச் சட்டத்திற்கு காங்கிரஸ் மூத்த தலைவரான சித்தராமையா கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில், கர்நாடக அரசு இயற்றியுள்ள இச்சட்டம், அரசமைப்புச் சாசனத்திற்கும் மனித உரிமைக்கும் எதிரானது. மதமாற்றத் தடைச்சட்டம் ஆர்.எஸ்.எஸ்ஸின் மறைமுக செயல்திட்டங்களில் ஒன்று, என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

சித்தராமையாவின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்துள்ள கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை, பிரேரணைக்கான வரைவு பிரேணை, காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில்தான் கொண்டுவரப்பட்டது, என தெரிவித்துள்ளார்.

# ராமர் கோயில் நிலத்தில் பா.ஜ.க. ஊழல் பிரியங்கா காந்தி குற்றச்சாட்டு



உத்தரப்பிரதேசமாநிலத்தில் இன்னும் சில மாதங்களில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றன. ஆளும் மத்திய அரசுக்கு எதிராக காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி, ஆம் ஆத்மி கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன.

இந்தத் தேர்தல் களத்தில், காங்கிரஸ் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி முன்வைத்துள்ள சில குற்றச்சாட்டுகள் தற்பொழுது முக்கிய விவாதப் பொருளாக மாறியிருக்கிறது

குறிப்பாக, அயோத்தியாவில் ராமர் கோவில் கட்டப்பட்டு வரும் இடத்திற்கு அருகே பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்களும் அரசு அதிகாரிகளும் நிலங்களை வாங்கிக் குவித்து வருகின்றனர். இதன் பின்னணியில், மிகப்பெரிய ஊழல் நடைபெற்றுள்ளது, என பிரியங்கா காந்தி குற்றம் கூறியிருப்பது, உத்தரப் பிரதேச தேர்தல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரியங்காகாந்தி இது குறித்து பேசுகையில், கடந்த 2017ஆம் ஆண்டு ஒரு குறிப்பிட்ட அளவுள்ள நிலமானது இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விற்கப்பட்டுள்ளது. அதில் முதல் பகுதி ராமர் கோயில் நிர்வாகத்திடம் 8 கோடி ரூபாவுக்கு விற்கப்பட்டுள்ளது. அது விற்கப்பட்டு சரியாக 19 நிமிடங்கள் கழித்து, இரண்டாவது பகுதி ரவி மோகன் திவாரி என்பவருக்கு 2 கோடி ரூபாவுக்கு விற்கப்பட்டுள்ளது. பின்னர் சரியாக ஐந்து நிமிடங்கள் கழித்து அதே நபர் 2 கோடி ரூபாய்க்கு வாங்கிய நிலத்தை சுமார் 18.5 கோடி ரூபாவுக்கு ராமர் கோயில் நிர்வாகத்திற்கு விற்றுள்ளார். ஒரே மதிப்புள்ள நிலம் எப்படி இவ்வளவு பெரிய தொகை வித்தியாசத்தில், மிகக்குறுகிய நேரத்தில் விற்கப்படுகிறது? என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது வெறும் ஒரேயொரு உதாரணம்தான். இதுபோல அயோத்தியா பகுதியில் ஏராளமான குளறுபடிகளுடன் நில விற்பனை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதனை நேரடியாகச் செய்வது, பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களும் மாநில அரசின் மூத்த அதிகாரிகளும்தான். ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகளும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர், எனவும் அவர் நேரடியாக குற்றஞ் சாட்டியுள்ளார். இவற்றுடன், இந்த ஆட்சியில் பொதுமக்களுடைய பக்தியை பயன்படுத்தி கோடிக்கணக்கில் ஊழல் மற்றும் லஞ்சம் நடைபெறுகின்றது என்றும் பிரியங்கா காந்தி குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

இதுகுறித்து விளக்கம் அளித்துள்ள கோயில் நிர்வாகத்தின் செயலாளர், அயோத்தியாவில் கோயில் கட்டுவதற்கு முன்பாகவே நிலங்களை விற்பதற்கான ஒப்பந்தங்கள் யாவும் அப்பொழுது இருந்த சந்தை மதிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. கோயில் அமைக்கும் முடிவு எடுக்கப்பட்டவுடன், சந்தை மதிப்பு கூடிவிட்டது. அதுதான் இந்த விலை மாற்றத்திற்கான காரணம், என விளக்கம் அளித்துள்ளார்.



# அதிநவீன'ப்ரளய்' ஏவுகணை பரிசோதனை வெற்றிபெற்றது

நிலத்தில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்ட அதிநவீன ப்ரளய் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதனை செய்துள்ளது.

ஒடிசாவில் உள்ள ஏ.பி.ஜே. அப்துல்கலாம் தீவில் இருந்து நேற்றுக் காலை 10.30 மணியளவில் ப்ரளய் ஏவுகணை பரிசோதனை செய்யப்பட்டது என்றும் அது நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் துல்லியமாக தாக்கியது எனவும் பரிசோதனை மையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 150 முதல் 500 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இலக்கைக்கூடத் தாக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ப்ரளய் ஏவுகணைப் பரிசோதனை வெற்றியை இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டியுள்ளார்.



# தமிழகத்தில் ஒமிக்ரோன் பரவலால் அச்சுறுத்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய ஸ்டாலின்

நைஜீரியாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்த ஒருவருக்கு முதலில் ஒமிக்ரோன் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதால் அவருடன் தொடர்பில் இருந்தவர்களுக்கும் ஒமைக்ரோன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் நேற்று மேலும் 33 பேருக்கு ஒமிக்ரோன் இருப்பது கண்டறியப்பட்டது. இன்னும் 23 பேரின் பரிசோதனை முடிவுகள் வரவேண்டியுள்ளன.

தமிழகத்தில் 'ஒமிக்ரோன்'பரவியது அதிகரித்து விட்டதால் இது மேலும் பரவாமல் இருக்க தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. ஒமிக்ரோன் பரவல் அதிகரிக்காத வகையில் அதைக் கட்டுப்படுத்த இப்போது தமிழக அரசு புதிய கட்டுப்பாடுகளை விதிக்கவும் முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலகத்தில் இன்று உயர் அதிகாரிகளை அழைத்து விரிவான ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் இறையன்பு, மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை முதன்மைச் செயலாளர் குமார் ஜெயந்த், மாநகராட்சி கமிஷனர் ககன்தீப்சிங் பேடி, பொலிஸ் டி.ஜி.பி. சைலேந்திர பாபு மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். ஒமைக்ரோனைக் கட்டுப்படுத்த உள்ளூர் மட்டத்தில் கட்டுப்பாடுகளை அமுல்படுத்த வேண்டும் என்றும் இரவுநேர ஊரடங்கை அறிவிக்க வேண்டும் என்றும் மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுரை வழங்கி உள்ளது பற்றியும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் ஒமிக்ரோன் அதிகம் உள்ள மாவட்டங்களில் இரவுநேர ஊரடங்கு விதிப்பது அவசியமா? அல்லது வேண்டாமா, என்பது பற்றியும் விவாதிக்கப்பட்டுள்ளது. வருகிற 31 ஆம் திகதி வரை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட கொரோனா காலக் கட்டுப்பாடுகள் நீடிக்கப்பட்டுள்ளதால் அதை அப்படியே தொடர்வதற்குப் பதிலாக சில மேலதிகக் கட்டுப்பாடுகளை விதித்து நீடிக்கலாமா, என்பது பற்றியும் ஆராயப்பட்டது. இந்த விடயங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக தமிழக அரசு சார்பில் விரிவான அறிக்கை விரைவில் வெளியாகும், என்று கூட்டத்தில் பங்கேற்ற அதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

# காரியாலய உதவியாளரை வரவழைத்து மாநகரசபை ஆணையாளர் தாக்குதல்

விடுமுறையிலிருந்தமட்டக்களப்புமாநகரசபையில் கடமையாற்றிவரும் காரியாலய உதவியாளரை காரி-யாலயத்துக்கு வரவழைத்து அவர் மீது மாநகரசபை ஆணையாளர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று வியாழக்கிழமை மாலை 5.30 மணி யளவில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தின் போது படுகாயமடைந்தவர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாநகரசபையில் காரியாலய உதவியாளராக கடமையாற்றிவரும் ஜனார்த்தன் விடுமுறையில் வீட்டில் இருந்துள்ளார்.

இந்த நிலையில் மாலை 5.30 மணிக்கு மாநகரசபை ஆணையாளர் காரியாலயத்துக்கு வருமாறு அழைத்தமையையடுத்து அவர் அங்கு சென்றுள்ளார்.

காரியாலயத்தில் ஆணையாளர் தலைமையில் ஒரு திட்டமிடல் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அங்குசென்ற காரியாலய உதவியாளரிடம் நீ என்ன மக்களிடம் பணம் பெற்றுக்கொள்கின்றாயா என ஆணையாளர் கேட்டுள்ளார்.

இதன்போது அவர் தான் அப்படி வாங்கவில்லை எனவும், முடிந்தால் பணம் பெற்றுக்கொண்டமையினை நிரூபிக்குமாறும் கோரியுள்ளார்.

இதனையடுத்து காரியால உதவியாளரின் மீது ஆணையாளர் தாக்குதல் மேற்கொண்டமையுடன், அவர் அணிந்திருந்த ரீசேட்டை கிழித்துள்ளார் எனக் கூறப் படுகின்றது.

இதன்போது காயமடைந்த உதவியாளர் மட்டு. போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதேவேளை காரியாலய உதவியாளர் தன்னை தாக்கினார் எனத் தெரிவித்து மாநகரசபை ஆணையாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# திருகோணமலை பன்குளம் பகுதியில் மக்களின் காணிகள் அடாத்தாக பிடிப்பு

திருகோணமலை,மொறவெவ பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பன்குளத்தில் உள்ள பொது மக்களுக்கு சொந்தமான காணியை அடாத்தாக வனவளத் திணைக்களத்தினர் அபகரித்துள்ளனர்.

இந்த நிலையில், தமது காணியை மீட்டுத் தாருங்கள் என அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1976 ஆம் ஆண்டில் குடியிருந்த இடமே இப்போது அத்துமீறி கையகப்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மை சமூகத்தை சார்ந்த நீர் கொழும்பை சேர்ந்தவர்களுக்கு ஐந்து ஏக்கர் காணி பன்றி வளர்ப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. எனவே தங்களுடைய காணியினை பெற்றுத்தருமாறு உரியவர்களிடம் கோரிக்கை விடுகின்றோம் என அந்த பகுதி மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

# மட்டக்களப்பில் கொல்லப்பட்ட தயாவதிக்கு இறுதி அஞ்சலி



மட்டக்களப்பு அரசடி பார் வீதியில் நகைகளைக் கொள்ளையடிப்பதற்காக கொடூரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்ட இரு பிள்ளைகளின் தாயான தயாவதியின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை நடைபெற்றன.

வர்த்தகரும் சமூக சேவகருமாகிய கலாநிதி கந்தையா செல்வராஜாவின்மனைவியின் இறுதிக் கிரியையில் அரசியல் பிரமுகர்கள், வர்த்தக சமூகத்தினர், அரிமாக் கழக அங்கத்தவர்கள் மற்றும் றோட்டறிக் கழக அங்கத்தினர்கள் உள்ளிட்ட பலர் மரியாதை செலுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார், மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவர் தேசபந்து எம். செல்வராஜா, களுவாஞ்சிக்குடி வர்த்தக சங்கத் தலைவர் வி.ஆர்.மகேந்திரன், மட்டக்களப்பு லயன்ஸ் கழக முன்னாள் தலைவர் எந்திரி ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் அஞ்சலி உரையாற்றினர்.



# சாய்ந்தமருதில் கலாசார விழா

கலாசார அலுவல்கள் திணைக்களம், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசாரப் பிரிவு மற்றும் கலாசார அதிகாரசபை ஆகியன இணைந்து நடாத்திய இவ்வாண்டுக்கான கலாசார இலக்கிய விழா நேற்று வியாழக்கிழமை சாய்ந்தமருது கமு/அல் - ஹிலால் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். பீகாவின் ஒருங்கிணைப்பில், சாய்ந்தமருது கலாசார அதிகார சபையின் தலைவரும், சாய்ந்தமருது பிரதேச செயலாளருமான எம்.எம். ஆசிக்கின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பிரதேச செயலக கணக்காளர் என்.பி.எம். லரீப், உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். றின்சான் உட்பட பிராந்திய எழுத்தாளர்கள், பிரபல கலைஞர்கள், இலக்கியவாதிகள், கல்விமான்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில், ஏற்கனவே நடைபெற்ற இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்கள் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிரான் பிரதேச சபை பிரிவில் சக்திவாய்ந்த குண்டு மீட்பு

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தொப்பிகல, மீயாங்கொல்ல காட்டுப் பகுதியிலிருந்து அதிசக்தி வாய்ந்த 130 மில்லி மீற்றர் பீரங்கி குண்டு மற்றும் நாட்டுத்துப்பாக்கி என்பன மீட்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப் படையினரோடு இணைந்து காகித ஆலை விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் இவை மீட்கப்பட்டன.

மீட்கப்பட்டுள்ளவற்றை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் மேற்கொண்டுள்ளமையுடன், கடந்த சில தினங்களாக இவ்வாறான கைவிடப்பட்ட வெடி பொருள்களை வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், பாதுகாப்பு தரப்பினரும் மீட்டு செயலிழக்கச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# எல்.பி.எல். - 2021 தொடரில் ஜப்னா கிங்ஸ் சம்பியனானது!

லங்கா பிறீமியர் லீக் - 2021 தொடரின் இறுதிப் போட்டியில் ஜப்னா கிங்ஸ் அணி 23 ஓட்டங்களால் கோல் கிளாடியேட்டர்ஸ் அணியை வீழ்த்தி இரண்டாவது தடவையாகவும் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

நேற்றிரவு நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜப்னா கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கி, 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அவிஷ்க பெர்னான்டோ 63 ஓட்டங்களையும், டொம் கட்மோர் ஆட்டமிழக்காது 57 ஓட்டங்களையும் குர்பாஸ் 35 ஓட்டங்களையும் எடுத்தனர். கோல் கிளாடியேட்டர்சின் மொகமட் ஆமிர், நுவன் துசார, சமித் பட்டேல் மூவரும் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்துதுடுப்பெடுத்தாடக்களமிறங்கிய கோல் கிளாடியேட்டர்ஸ் அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற, ஜப்னா கிங்ஸ் அணி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. தனுஷ்க குணதிலக 54 ஓட்டங்களையும், குசல் மென்டிஸ் 39 ஓட்டங்களையும் எடுத்தனர். ஜப்னா கிங்ஸ் அணியின் வனிந்து ஹசரங்க, சதுரங்க டி சில்வா இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

இந்த வெற்றியோடு இரண்டாவது முறையாகவும் எல்.பி.எல். வெற்றிக் கிண்ணத்தினை ஜப்னா கிங்ஸ் அணி தனதாக்கிக்கொண்டது. 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது எல்.பி.எல். தொடரில் ஜப்னா ஸ்டாலியன்ஸ் என்ற பெயரில் விளையாடியிருந்த இந்த அணி அப்போதும் இறுதிப்போட்டியில் கோல் கிளாடியேட்டர்சை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப்போட்டியினதும் தொடரினதும் சிறப்பாட்டக் காரராக ஜப்னா கிங்ஸ் அணியின் அவிஷ்க பெர்னான்டோ தெரிவானார்.



## அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெற்றார் ஹர்பஜன் சிங்

அனைத்து வகை கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுகிறேன் என ஹர்பஜன் சிங் அறிவித்துள்ளளார். இந்திய கிரிக்கெட் அணியின் சிறந்த சுழற்பந்து வீச்சாளராக திகழ்ந்தவர் ஹர்பஜன் சிங். கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்திய அணியில் இடம்பிடிக்காமல் இருந்த ஹர்பஜன் சிங், ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி வந்தார்.

41 வயதாகும் ஹர்பஜன் சிங் 1998 ஆம் அண்டு மார்ச் 25 ஆம் திகதி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். 103 டெஸ்ட்களில் விளையாடிய அவர், 417 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார். இந்திய அணிப் பந்துவீச்சாளர்களில் அதிக டெஸ்ட் கிரிக்கெட் விக்கெட்டுக்களை கைப்பற்றியோர் வரிசையில் இவர் நான்காமிடத்திலிருக்கிறார்.

டெஸ்ட்டில் அறிமுகமான அதே 1998 ஆம் ஆண்டு ஒருநாள் போட்டிகளிலும் அறிமுகமாகிய அவர், 236 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 269 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருக்கிறார். 28 ரி-20 போட்டிகளிலும் இவர் விளையாடியிருக்கிறார். அவற்றில் அவர் கைப்பற்றியவை 25 விக்கெட்டுகளாகும்.

இந்திய அணிக்காக மொத்தமாக இவர் வீழ்த்திய விக்கெட்டுக்களின் எண்ணிக்கை 707. அனில் கும்ப்ளேயின் 953 விக்கெட்டுக்களுக்கு அடுத்ததாக இவர்தான் இரண்டாமிடத்திலிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேற்கிந்தியத் தீவுகளுடனான ரி-20 தொடர் இங்கிலாந்து கிரிக்கெட் அணி அறிவிப்பு

வரும் புதிய ஆண்டின் ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரில் பங்கேற்கும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி அங்கே 5போட்டிகள்கொண்டரி-20தொடரில்விளையாடவிருக்கின்றது. இந்தத் தொடருக்கான 16 பேர் கொண்ட இங்கிலாந்து அணியில், இதுவரை சர்வதேசப் போட்டிகளில் அறிமுகமாகாத இடதுகை வேகப் பந்துவீச்சாளரான டேவிட் பெய்ன் இடம்பெற்றிருக்கின்றார்.

டேவிட் பெய்ன் இங்கிலாந்தின் ஒருநாள் குழாத்தில் முன்னர் உள்வாங்கப்பட்டிருந்த போதும் அவருக்கு போட்டிகள் எதிலும் விளையாடும் வாய்ப்பு கிடைத்திருக்கவில்லை. இவர், அண்மையில் நிறைவடைந்த உள்ளூர் கிரிக்கெட் தொடரில் 9 போட்டிகளில் விளையாடி 12 விக்கெட்டுக்களைச் சாய்த்திருந்ததோடு, முதல் முறையாக நடைபெற்றத ஹன்ரட் தொடரிலும் வேல்ஸ் பையர் அணிக்காக விளையாடி 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்போது ஆஷஷ் தொடரில் விளையாடிவருகின்ற இங்கிலாந்து ரி-20 அணியில் வழமையாக இடம்பெறும்வீரர்களான டேவிட் மலான், ஜொனி பெயர்ஸ்டோ, ஜோஸ் பட்லர், மார்க் வூட், கிறிஸ் வோக்ஸ், டொம் கரன் மற்றும் டேவிட் வில்லி ஆகியோர் மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் இணைக்கப்படவில்லை.

அதேநேரம் அபுதாபி ரி-10 லீக் மற்றும் லங்கா பிறீமியர் லீக் என்பவற்றில் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்திய பில் சோல்ட்டுக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரின்போது இங்கிலாந்து அணியின் தற்காலிகப் பயிற்சியாளராக, அவ்வணியின் முன்னாள் வீரரான போல் கோலிங்வூட் செயற்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணி விவரம் - ஒயின் மோர்கன் (தலைவர்), மொயின் அலி, டொம் பன்டன், சாம் பில்லிங்ஸ், லியாம் டோசன், ஜோர்ஜ் கார்டன், கிறிஸ் ஜோர்டன், லியாம் லிவிங்ஸ்டன், சகீப் மஹ்மூட், டைமல் மில்ஸ், டேவிட் பெய்ன், அடில் ரஷீட், ஜேசன் ரோய், பில் சோல்ட், ரீஸ் டொப்லி, ஜேம்ஸ் வின்ஸ்



## விலக மனோ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம் 13ஐ மீண்டும் வலியுறுத்துவதற்கு இணங்கவே முடியாது என்ற திட்டவட்டமான நிலைப்பாட்டைத் தமிழரசுத் தலைவர்களான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் திரும்பவும் வலியுறுத்தி, அதனை உடும்புப்பிடியாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இதனால் விவகாரம் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது.

### மனோவின் நிலைப்பாடு

இது தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் அறிக்கை ஒன்றை தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. மேற்படி 21ஆம் திகதிக் கூட்டத்தில் பங்குபற்றிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்.

அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

டிசெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ள வரைவுகள் தொடர்பாக எனது பதிலுரை இது.

அன்பின் தலைவர்கள், பொது செயலாளர்கள், கட்சி பிரதிநிதிகள், கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும்.

21 ஆம் திகதிய கூட்டத்திற்கு பிறகு எனது முதற்கட்ட அவதானங்கள்:-

நவம்பர் முதல் வாரத்தில் நாம் யாழ். திண்ணையில் ஆரம்பித்த செயற்பாட்டில் இருந்து நாம் விலகிச் செல்கிறோம் என நான் அச்சப்படுகிறேன். எனது புரிதலின் படி, எமது அசல் நோக்கங்கள், 13 ஆம் திருத்தத்தை பாதுகாத்து அமுல்படுத்தும்படியும், இலங்கை தமிழ் பேசும் மக்கள் இன்று எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தும்படியும் புதுடில்லியை கோருவது என நினைக்கிறேன்.

காஷ்மீர் முஸ்லிம் சுயநிர்ணயக் கோரிக்கையை கொண்ட போராட்டத்தை காஷ்மீரத்தில் இந்தியா ஏற்கனவே எதிர்கொள்கிறது. ஜம்மு, காஷ்மீர் இணைப்பை அது துண்டித்து விட்டது. இந்திய அரசமைப்பில் காஷ்மீரத்துக்கு இருந்த விசேட சட்ட ஏற்பாட்டை நீக்கி, காஷ்மீர் மாநில அரசு அனுபவித்த அதிகாரங்களை மீள பெற்றுக்கொண்டது. அனைத்தும் இலங்கையின் வடக்கு கிழக்கு நடப்பை போன்றவைகள் ஆகும். இவைபற்றிய மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால், இவைதான் இன்றைய இந்திய அரசின் கொள்கைகள்.

ஆகவே, இந்தியாவை நாம் கோர/அழைக்க வேண்டுமானால், கவனமாக (தந்திரமாக....), பி.ஜே.பி. அரசை தர்ம சங்கடத்துக்குள் தள்ளாமல் அழைக்க வேண்டும்.

எமது ஆரம்ப நோக்கங்களின் படி, நாம் இந்தியாவை, அவர்களது கடப்பாட்டை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி, அவர்களது நல் அதிகாரத்தை (இராஜதந்திர சொல்லாடல்...) பயன்படுத்தி, 13ஐ முழுமையாக அமுல் செய்ய, உள்ளே இழுக்க விரும்பினோம்.

13 எமக்கான அரசியல் தீர்வு அல்ல என்பதும், இந்திய ஒன்றிய மாநிலங்களின் அதிகார வரம்பிற்கு அப்பால் சென்று, எமக்கு சமஷ்டியை பெற்று கொடுக்க, இந்தியாவை அழைக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். எங்கள் சச்சரவுகளை பற்றி பல பக்கங்களில் நாம் விவரணமாக எழுதலாம். ஏற்கனவே தளர்ந்து போய், விரக்தியடைந்துள்ள, எமது மக்களுக்கு கனவுலக நம்பிக்கைகளை நாம் கொடுக்கலாம். ஆனால், சமஷ்டிக்கான ஜனநாயக போராட்டங்களை நாம் இங்கே எமது மண்ணில், நாம்தான் முன்னெடுக்க வேண்டும். நமோவும், பைடனும் உள்ளே வர மாட்டார்கள்.

முடியுமானால், உலகில் வேறு எங்கும் சென்று, தலையீடுகளை கேட்டு பார்க்கலாம். ஆனால், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் எஞ்சியுள்ள முன்னாள் இணைத்தலைமை நாடுகள் எவையும், இந்தியாவை மீறி அல்லது கடந்து ஓர் அடி எடுத்து வைக்க மாட்டார்கள். இதில் நான் மிகத்தெளிவாக இருக்கிறேன்.

எமது ஆவண தலைப்பை 'இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 இலங்கை அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் முழுமையாக அமுலாக்கல்' என்பதிலிருந்து, 'ஆட்சி அதிகார பகிர்விற்கான தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள் மற்றும் இந்திய - இலங்கை ஒப்பந்தம்' என மாற்றியுள்ளோம்.

இதை நாம் ஏற்றுக்கொண்டாலும் கூட, இங்கே அதி முக்கியமான 13ஆம் திருத்தம் தொடர்பான சொல்லாடலை நாம் அகற்றி விட்டோம்.

இந்த தலைப்பு மாற்றத்தை ஏற்றுக் கொண்டாலும் கூட, ஏறக்குறைய ஒரு பக்க கடிதம், ஏழு பக்கங்களாகி விட்டது. இந்தக் கடித ஆக்க முறையை சிலாகித்து, அதன் உள்ளடக்கத்துடன் பெரும்பாலும் உடன்பட்டாலும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் ஒரு பிரச்சினையை எதிர்கொள்கிறேன்.

இக்கடிதத்தில் வடக்கு - கிழக்கு கோணத்தை தவிர, வேறு எவரைப் பற்றியும் குறிப்பிடப்படவில்லை. தமிழ்த் தேசியப் பிரச்சினை என்ற ஒரே பிரச்சினைக்குள் எல்லாப் பிரச்சினைகளையும் உள்ளடக்கும் பாரம்பரிய சிந்தனை தொடர்ந்து, அந்த அடிப்படையிலேயே கௌரவ. நரேந்திர மோடியை கோருவதாக முடிகிறது. அனைத்து தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளையும், இந்த தமிழ் தேசிய பிரச்சினை என்பதற்குள் உள்ளடக்குவதனுடன், ஏனையோரின் பிரச்சினைகள் விவரிக்கப்படுவதை மேலாதிக்க போக்கில் தவிர்க்கிறது.

பின்வரும் இரண்டு சாத்தியங்களை பாருங்கள்:

(அ) வடகிழக்கு தமிழ், மலையக தமிழ், முஸ்லிம் மக்கள் ஆகிய நாம் அனைவரும், இந்த செயற்பாட்டில் ஒன்றிணைய வேண்டுமென்றால், மலையக வரலாறு, அவதானங்கள் (முஸ்லிம் கோணம் உட்பட...) உள்வாங்கப்பட்டு, இது மீள எழுதப்பட்டு, கட்டமைக்கப்பட வேண்டும்.

(ஆ) வடக்கு, கிழக்கு தலைவர்கள் மாத்திரம் கையெழுத்திட்டு இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுவார்கள் எனில், அது சரியாக இருக்கும். அவ்வாறாயின், எமது நல்வாழ்த்துக்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கும்.

இப்போது நாம் மலையக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பான ஆவணத்தை தயாரிக்கிறோம். ஆனால், இந்த கடிதத்தில் மலையக, முஸ்லிம் அபிலாஷைகள் இணைக்கப்படுமாயின், பிரதமர் மோடிக்கு எழுதப்படும் இந்த கடிதம் 10 பக்கங்களையும் தாண்டும்.

அடுத்த விவகாரம், கடிதத்துடன் இருக்கின்ற, தமிழ்ப் பேசும் மக்கள் எதிர் நோக்கும் ஏழு முக்கிய பிரச்சினைகள் அடங்கிய பட்டியல். கடந்த கலந்துரையாடலின் போது, இந்த பட்டியல் ஆவணத்தை ஒதுக்கி வைக்கும் ஒரு முயற்சி உருவாகி, அது பலத்த வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியது. இந்த ஆவணம் பற்றிய, குறிப்பு கடிதத்தில் இல்லை. இந்த ஏழு பக்க கடிதம் மட்டுமே ஒரே ஆவணம் என்ற முயற்சியை ஒருபோதும் ஏற்க முடியாது. அது பிற்சேர்க்கையும் அல்ல. கடிதமும், ஏழு முக்கிய பிரச்சினைகள் பட்டியலும் சமமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஏழு முக்கிய பிரச்சினைகள் பட்டியலின் தலைப்பு, இலங்கைத் தமிழ் பேசும் மக்களின், கவனத்தில் எடுக்க வேண்டிய பிரதான அவசர பிரச்சினைகள் என தலைப்பிட வேண்டும் என விரும்புகிறேன். - என்று உள்ளது.

### சுமந்திரனின் பதில்

இது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் கூறியவை வருமாறு:-

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கடந்த 20 ஆம் திகதி கூடியது. தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் வழங்கப்பட்ட 2 ஆவது வரைவு அங்கு ஆராயப்பட்டது. அடுத்தநாள் 21 ஆம் திகதி நாம் கூட்டத்திற்குப் போன போது தமிழ்க் கட்சிகள் சார்பில் 3 ஆவது வரைவு தரப்பட்டது.

2 ஆவது வரைவை நாம் 20 ஆம் திகதி ஆராய்ந்த போது 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தக் கோருவதே தலைப்பாகவும் விடயமாகவும் குறிக்கோளாகவும் அதில் இருந்தமையை அவதானித்தோம்.

அதற்கு இணங்க முடியாது என்பது தான் தமிழரசின் நிலைப்பாடு. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஓர் ஆவணத்துக்கு இணங்கி ஒப்பமிட தமிழரசு தயாராக இருந்தது. இருக்கின்றது. அதனால்தான் ஒரு மாற்று வரைவு செய்ய இணங்கப்பட்டது.

பழையதை - அவர்கள் தந்ததை - திருத்த முடியாது என்பதால் தான் நாம் வேறு ஒரு வரைவை ஆக்கினோம்.

21 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறையாக்கக் கோரும் கோரிக்கைக்கு நாங்கள் இணங்கி வர மாட்டோம் என்பதை சம்பந்தனும் மாவை சேனாதிராசாவும் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறினர்.

"என்னை வற்புறுத்தி - பலவந்தப்படுத்தி - என் கையெழுத்தை நீங்கள் பெற முடியாது. 13 ஆவது திருத்தத்துக்கு நாங்கள் ஏன் இணங்க முடியாது என்பதை 1987 இலேயே கையெழுத்திட்டு பிரதமர் ராஜீவுக்கு கடிதமாக நான் வழங்கியிருக்கின்றேன். அதிலிருந்து நாம் விலகவே முடியாது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இருப்பவை சரியானவை. ஆனால் 13 ஆவது திருத்தம் அந்த ஒப்பந்தத்தில் உள்ள இலக்குகளை அடையவில்லை. அதுதான் எமது நிலைப்பாடு. ஆனால் அரசமைப்பில் இருப்பது 13 ஆவது திருத்தம்தான். அதை நீங்கள் முழுமையாக அமுல்படுத்துவதாயின் அமுல்படுத்துங்கள். அது அரசமைப்பில் உள்ளது. அதை செய்வது அவர்கள் கடமை. செய்யட்டும். ஆனால் இந்தியாவுக்கு அவர்கள் அளித்த வாக்குறுதி, 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பாலும் போய் அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவோம் என்பதாகும். அரசாங்கத் தலைவர்களே அதற்கு உறுதியளித்த பின்புலத்தில் - 34 வருடங்களுக்கு முன்னர் நாம் நிராகரித்த 13 ஐ மீளவும் வலியுறுத்துவோம் என நீங்கள் எதிர்பார்ப்பது தவறு. அதற்கு நாங்கள் இணங்கவே மாட்டோம்.'' - என்று அந்தக் கூட்டத்தில் சம்பந்தன் உறுதியாகத் தெரிவித்தார். அதையே தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவும் வலியுறுத்தினார்.

அதனால்தான் இந்த மாற்று வரைவு. அதை சமர்ப்பித்து நான் முழுமையாக வாசித்த பின்னர் மனோ கணேசன்தான் முதலில் கூறினார். "இது பரவாயில்லை, இதை நாம் ஏற்றுக் கொள்ளலாம்" - என்று.

"சில சில மாற்றங்களைச் செய்யலாம். முன்னைய வரைவுகளில் உள்ள சிலவற்றை இதில் சேர்க்கலாம்'' என்று அவரே கூறினார்.

எல்லோரும் அதனை ஏற்றுக் கொண்டு, கடைசியாக அவர்கள் சமர்ப்பித்த வரைவில் வரலாற்றுப் பின்னணி தொடர்பாக அவர்கள் குறிப்பிட்ட மூன்று பந்திகளை எடுத்து, எமது வரைவில் வரலாற்றுப் பின்னணி பற்றிய பந்திகளுக்குப் பதிலீடாகச் சேர்த்துக் கொள்வது என எல்லோருமாகத் தீர்மானித்தோம்.

ஆனால் உள்ளடக்கம், தலைப்பு, முடிவு மூன்றுமே '13 அல்ல' என்று தீர்மானிக்கப்பட்டது. எமது அபிலாஷை சமஷ்டி அடிப்படையிலான கட்டமைப்பு என்று அதில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. 13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் செல்வது குறித்து இலங்கை - இந்திய அரசாங்கங்கள் கூறியவை எல்லாம் எமது அந்தப் புதிய வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 13 அல்ல, 13க்கு அப்பால் செல்வது ஒரு தொடக்கப்புள்ளியாக இருக்க முடியும் என இந்தியா கூறியுள்ளது. அதையும் நாம் குறிப்பிட்டுள்ளோம். அப்படி நாங்கள் குறிப்பிட்டுள்ளமையால் ஆவணத்தின் தலைப்பு '13 ஐ நடைமுறைப்படுத்தக் கோருவது' என்று அமைவது தவறு என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆவண உள்ளடக்கத்துக்கு ஏற்ப தலைப்பு மாற்றப்பட்டது. மனோ கணேசன் உள்பட எல்லோரும் இணங்கித்தான் அந்தத் தலைப்பு இப்போதைய வடிவத்துக்கு மாற்றப்பட்டது. பொருளும், தலைப்பும் மாற்றப்பட்ட பின்னரும் சில தினசரிகள் '13 ஆவது திருத்தத்தின் நடைமுறையாக்கத்துக்கான இணக்கம்' என்றவாறாகச் செய்தி வெளியிட்டமையால் அதை ஒட்டி நான் ஒரு விசேட அறிக்கையை வெளியிட்டு நிலைமையைத் தெளிவுபடுத்தினேன்.

தலைப்பு, பொருள், விடயம், உள்ளடக்கம், குறிக்கோள் யாவையும் மாற்றப்பட்டுள்ளன என்று இப்போது மனோ கணேசன் கூறுவது உண்மை. அத்தகைய இணக்கம் அவருடன் சேர்ந்து அன்று எட்டப்பட்டது. அதுதான் அன்றைய முடிவு. அது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

ஆரம்பத்தில் தொடங்கிய விடயத்தில் இருந்து விலகுகிறோம் என அச்சப்படுவதாக அவர் இப்போது குறிப்பிட்டுள்ளார். அச்சப்படுவதில்லை, அதுதான் நடந்திருக்கின்றது. அப்படி விலகாமல் தமிழரசு பழைய ஏற்பாட்டுக்கு இணங்காது.

அவருடைய இந்த நிலைப்பாடு பற்றிய மின்னஞ்சல் கிடைத்ததும் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவுடன் நேற்றும் (வியாழனன்று), சம்பந்தன் ஐயாவுடன் இன்றும் (வெள்ளியன்று) இது குறித்து நான் விரிவாகப் பேசியுள்ளேன். இருவருமே 13 ஐ முன்னிலைப்படுத்தி இந்த ஆவணத்தை தயார் செய்யவே முடியாது என்று கூறியுள்ளனர். ஏனெனில் தலைப்பு முக்கியம். உள்ளடக்கமும் 13 ஐ நடைமுறைப்படுத்துவது பற்றியதல்ல. ஆனபடியால் அது (13 ஐ முன்னிலைப்படுத்தி) செய்ய முடியாதது. வேறு ஏதும் விதமாக மொழி நடையைப் பாவித்து ஓர் இணக்கப்பாட்டிற்கு வர முடியுமானால் அதற்கு முயற்சியுங்கள் என்று எனக்குக் கூறியுள்ளனர்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதை வலியுறுத்தும் ஏற்பாட்டுக்கு தமிழரசு இணங்காது என்பதை இரண்டு தலைவர்களும் எனக்கு உறுதியாகத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

- இவ்வாறு சுமந்திரன் தெரிவித்துள்ளார். (உ)

## தமிழ், முஸ்லிம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதி அமைச்சர் அலி சப்றியைப் பதவி விலகச் சொல்லும் ஞானசார தேரரை, ஜனாதிபதி செயலணிக்கு, இந்த ஜனாதிபதிதான் நியமித்தார். அமைச்சர் அலி சப்றியையும், கெபினட் அமைச்சராக இந்த ஜனாதிபதிதான் நியமித்தார்.

இந்நிலையில், ஜனாதிபதியின் ஞானசாரர், ஜனாதிபதியின் அமைச்சரைப் பதவி விலகச் சொல்கின்றார்.

இதென்ன கூத்து? எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இப்படிச் சொன்னால் அதில் ஓர் அரசியல் தர்க்கமாவது இருக்கும். அப்படியும் நான் அதைச் சொல்லமாட்டேன். அரசை நாம் கடுமையாக எதிர்ப்பது என்பது வேறு.

ஆனால், இந்த அரசுக்குக்கு உள்ளே சிறுபான்மை கெபினட் அமைச்சர்கள் இருப்பது நல்லது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இதுதான் இலங்கை அரசு.

அமைச்சர்கள் அலி சப்றி, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அங்கே இருக்கின்றமையால் தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச பிரச்சினைகளையாவது அரச தலைமையின் கவனத்துக்குக் கொண்டுவர முடிகின்றது. இந்தக் குறைந்தபட்ச அவகாசத்தையும் கூடத் தட்டிப் பறிக்க இந்த காவி பயங்கரவாதி ஆள் முயல்கின்றார்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றைத் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இந்த ஆள் பேசுகின்றார். இவர் மீது சட்டம் பாயாது. ஆனால், முகநூலில் எதையாவது சிறுபிள்ளைத்தனமாக எழுதி விடும் தமிழ்ப் பையன்களைத் தேடி வீட்டுக்குப் பொலிஸ் வருகின்றது. இந்த ஆளுக்கு விசேட சட்ட விலக்கு இருக்கின்றது.

ஆகவே, இவரது செயலணியின் பெயரை 'ஒரு ஆளுக்கு - ஒரு சட்டம்' என நான் பிரேரிக்கின்றேன்.

அதேபோல், இவரது இந்த வாயில் வருவதை எல்லாம் பேசும் நடத்தையை ஆட்சேபித்து, இந்தச் செயலணியில் இருக்கும் தமிழ், முஸ்லிம்களை உடன் பதவி விலகுமாறு கோருகிறேன். இல்லாவிட்டால் இந்தப் பாவம் இவர்களையும் சேரும் எனவும் கூறுகின்றேன் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# புலிகளின் காலத்தில் அரிசிக்கும் பருப்புக்கும் வேற்றுநாடுகளிடம் கையேந்தும் நிலையில்லை

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சுகாஷ் சுட்டிக்காட்டு



தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், அவர்கள் தமது மக்களை அரிசிக்கும் பருப்புக்கும் வேற்று நாடுகளிடம் கையேந்தும் நிலையில் வைத்திருக்கவில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், அவர்கள் எந்த நாட்டிடமும் கடன் கேட்டுப்பிச்சை எடுத்திருக்கவில்லை. அவர்கள் தமது நிலங்களையோ, வளங்களையோ எந்த நாட்டுக்கும் விற்பனை செய்திருக்கவுமில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், அவர்கள் வெளிநாடுகளின் போர் வீரர்களைத் துணைக்கு அழைத்துப் போரிட்டிருக்கவில்லை. அவர்கள் எந்தவொரு சிங்களப் பெண்ணையும் துஷ்பிரயோகம் செய்திருக்கவில்லை.

உச்சமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், யாழ்ப்பாணம் கோட்டைப் பெருஞ்சமரின் போது கோட்டைக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டிருந்த சிங்கள இராணுவம் உண்ண உணவும், குடிக்கத் தண்ணீருமின்றித் தவித்தபோது உணவையும், நீரையும் இராணுவத்துக்கு அனுப்பி மனிதாபிமானத்தின் எல்லைவரை சென்றவர்கள் அவர்கள்.

ஆனால், நீங்களோ பச்சிளம் பாலகன் பாலசந்திரனுக்குப் பிஸ்கட் கொடுத்துவிட்டுச் சுட்டுப் படுகொலை செய்தவர்கள். இப்பொழுது கூறுங்கள் சரத் பொன்சேகா, யார் படிப்பறிவற்றவர்கள்? – எனத் தெரிவித்துள்ளார்.

# சப்பாத்து துடைக்கும் சிப்பாயான பொன்சேகாவுக்கு 'பீல்ட் மார்ஷல்' கிடைக்கக் காரணன் பிரபாகரன்!

## மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சாட்டை

தமிழர் விடுதலைப் போராட்ட இயக்கங்களை தலைமை தாங்கியவர்களுக்கும் குறிப்பாக தலைவர், அன்ரன் பாலசிங்கம் போன்றவர்களுக்கும் படிப்பறிவு இல்லை என சீண்டல் தனமாக சரத் பொன்சேகா உளறியுள்ளார் என வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

சரத் பொன்சேகா அரசியல் வங்குரோத்து அடைந்து விட்டார் என்பதையே இந்தக் கருத்து மிக ஆழமாக வெளிப்படுத்தியுள்ளது. கடந்த காலத்தில் பிரபாகரனின் காலில் உதிர்ந்து விழும் முடிக்கு கூட இங்கு எவருக்கும் தகுதி இல்லை என கூறிய வாய் இன்று மாறி அரசியல் வங்குரோத்தை அடைந்துள்ளது. பிரபாகரன் பத்தாம் வகுப்பு வரை கல்வி கற்றவர் என்பது உலகறிந்த விடயம். அன்ரன் பாலசிங்கத்தை சிறந்த இராஜதந்திரியாக உலகமே ஏற்றுக் கொண்டமையை அனைவரும் அறிவர். ஏனைய இயக்க தலைவர்களும் சிறந்த கல்விமான்கள் என்பதும் வரலாறு. உதாரணமாக ரெலோ தலைவர் சிறீ.சபாரத்தினம் முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் ஒன்றாக நண்பர்களாக லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றவர்.

விடுதலைப் புலிகள், ஈரோஸ், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற இயக்கங்களில் ஆயிரக்கணக்கான பல்துறை சார் அறிவாளிகள் இருந்தனர்.



பிரபாகரன் மாபெரும் போராட்ட இயக்கத் தலைவராக வளர்ந்திருக்காவிட்டால் பொன்சேகா இராணுவத்தில் சப்பாத்து துடைக்கும் சிப்பாயாகத்தான் இருந்திருப்பார்.

இன்று தகுதிக்கு மிஞ்சிய பீல்ட் மார்ஷல் கௌரவம் கிடைத்தது என்றால் தலைவர் பிரபாகரனால் பொன்சேகாவிற்கு கிடைத்த பிச்சை என்பதை பொன்சேகா மறந்து விட்டார். அத்துடன் ராஜபக்ஷக்கள் சிறையில் அடைத்து அரைக் காற்சட்டையுடன் மனித மலம் அள்ள விட்டதையும், வரிசையில் சாப்பாட்டுக்கு நின்றதையும் பீல்ட் மார்ஷல் கௌரவத்தை பறித்ததையும் மறந்து விட்டார் போல. சிங்கள இனவாதிகள் யாராவது பொன்சேகா உட்பட அரசியல் திறமை இருந்தால் தமிழர் விடுதலைப் போராட்டத்தையும், பிரபாகரனின் பெயரை உச்சரிக்காமல் பதவிகளை பெற முடியுமா என்பதை எதிர்காலத்தில் நிரூபியுங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கையில் அறிவிக்கப்படுகின்ற கொரோனாத் தரவுகளால் சர்ச்சை

## உபுல் றோஹண சுட்டிக்காட்டு



நாட்டில் நாளாந்தம் வெளியாகும் கொவிட் தொற்று தரவுகளை விட அதிகமான நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர் எனவும் வெளியிடப்பட்ட தரவுகள் தவறானவை எனவும் இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தினசரி அறிவிக்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான தொற்றாளர்கள் உள்ளனர். வெளியிடப்படும் புள்ளி விவரங்கள் தவறானவை. இறந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பாகக் கடுமையான சிக்கல்கள் உருவாகியுள்ளன.

எப்படியிருப்பினும் தொற்று நோய் வேகமாகப் பரவி வருகிறது. கடந்த புதன்கிழமை அறிவிக்கப்பட்ட மூன்று ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கையுடன் சேர்த்து இதுவரையில் 7 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இன்னமும் அடையாளம் காணப்படாத அதிக எண்ணிக்கையிலானோர் சமூகத்தில் இருக்கலாம்.

நெதர்லாந்தில் இதுவரையில் நாடு முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதிய மாறுபாடு நாட்டை ஆபத்தான நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதைச் சிந்தித்து அவதானத்துடன் நத்தார் பண்டிகையை கொண்டாடுமாறு பொது மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நீண்டகாலமாக இழுபறியினால் செயலிழந்து காணப்படும் வவுனியா மணிக்கூண்டு கோபுரம்

நகரசபை – வீதி அபிவிருத்தி அதிகார சபை இழுபறியால் வவுனியா நகர மத்தியில் காணப்படும் மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடுகள் கடந்த பல மாதங்களாக செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

நகரத்துக்கு மத்தியில் அதாவது பொதுச்சந்தை, வங்கிகள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றுக்கு செல்லும் பாதையில் காணப்படுகின்ற இந்த மணிக்கூண்டு கோபுரம் கடந்த வருடங்களில் சீரான முறையில் இயங்கியதுடன் வடக்கின் வாயில் என வவுனியா நகரம் காணப்படுவதால் மணிக்கூண்டு கோபுரம் பலருக்கு நேரம் பார்ப்பதற்கு உதவியதுடன், நகருக்கு அழகையும் தந்தது.

மணிக்கூட்டு கோபுரம் பல லட்சம் ரூபா செலவில் நகரசபையினரால் புதுப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் தற்போது முற்றாக செயலிழந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக வெளி மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் உட்பட எமது பகுதி மக்களும் வவுனியா மணிக்கூண்டு கோபுரத்தைப் பார்வையிட்டு நேரம்காட்டாமையையடுத்து ஏமாற்றம் அடைகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் வவுனியா நகர சபையினரைத் தொடர்புகொண்டு வினவிய போது –



குறித்த மணிக்கூண்டு கோபுரம் கடந்த பல வருடங்களாக நகரசபையின் கட்டுப்பாட்டுக்குள் காணப்பட்டது. மணிக்கூண்டு கோபுரத்தில் விளம்பரப்படுத்தல் மூலம் நிதியை ஈட்டி அதன் மூலம் கிடைக்கப்பெறும் நிதியில் மணிக்கூண்டு கோபுர பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டிருந்தோம்.

ஆனால் தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பொறியியலாளர் மணிக்கூண்டு கோபுரம் அவர்களது அதிகார சபைக்குச் சொந்தமானது எனத் தெரிவித்தமையுடன், மணிக்கூண்டு கோபுரத்தில் நகரசபையினர் எவ்வித விளம்பரப்படுத்தல் குத்தகைக்கும் வழங்க முடியாது எனத் தெரிவித்தார்.

இந்நிலையாலேயே நகரசபைக்கு தற்போது அதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் நிறுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக எம்மால் மணிக்கூண்டு கோபுரத்தை மீள்திருத்தம் மேற்கொள்ள முடியவில்லை எனத் தெரிவித்தனர்.

நகரசபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றுக்கு இடையே ஏற்பட்டுள்ள சிறு பிரச்சினையின் காரணமாக மணிக்கூண்டு கோபுரம் தற்போது மக்களுக்கு உதவாத நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.12.2021இல் வெளியிடப்பெற்றது.